1983 ஜனவரி 29]

தமிழ்நாட்டில் லாப்ராஸ்கோப் என்ற நவீன கருவியைப் பயன்படுத்தி கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் திட்டம்.

*வினா எண். 54—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் லாப்ராஸ்கோப் என்ற நவீன முறையில் கருத்தடை ஆபரேஷன் செய்ய அரசு பரிசீலனை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் லாப்ராஸ்கோப் என்ற நவீன கருத்தடை அறுவை சிகிச்சைக் கருவியைப் பயன்படுத்தி மே திங்கள் 1980 முதல் ராயபுரத்தில் அமைந்துள்ள ராஜா சர் ராமசாமி முதலியார் மருத்துவமனையிலும் மார்ச் மாதம் 1981-லிருந்து எழும்பூரில் அமைந்துள்ள மகப்பேறு மற்றும் தாய்சேய் நல மருத்துவ மனையிலும் மற்றும் மே மாதம் 1981-லிருந்து மதுரை ராஜாஜி மருத்துவமனையிலும் மகளிர்க்கான குடும்பநல அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் திருவல்லிக்கேணியில் கஸ்தூரிபாய் மெமோரியல் மருத்துவமனையில் டாக்டர் கண்ணம்மாள் என்பவர் தன் கருவைக் கலைப்பதற்கு முயற்சி செய்து அந்த இடத்திலேயே இறந்து போயிருக்கிறார். அந்த அறுவை சிகிச்சையின்போது லாப்ராஸ்கோப் கருவி உபயோகிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சென்னையிலும், மதுரையிலும் மட்டும் தான் அந்த லாப்ராஸ்கோப் முறையில் கருத்தடை ஆபரேஷன் நடந்து வருவதாகத் தெரிவித்தார்கள். அண்மையில் கோவில்பட்டியில் இந்த முறையில் ஆபரேஷன் நடைபெற்று ஒரு பெண்மணி ஒரு மணி நேரத்திலேயே இறந்து விட்டதாக அரசாங்கத்திற்கு மனு அனுப்பியிருக்கிறார்கள். ஆபத்தான முறையாக இருக்கிறதே, இறந்தவருக்கு நஷ்டயீடு அளிக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரையில் சென்ற ஆண்டு 4 ஆயிரம் பேர்கள் லாப்ராஸ்கோப் மூலம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 14 ஆயிரம் பேர்களுக்கு இந்த அறுவை சிகிச்சை நடைபெற்றிருக்கிறது.

(முற்பகல் 10·00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி சொல்லக்கூடிய பிரச்னையில் வேறு ஒரு காரணத்திற்காக இறந்ததாகத்தான் நமக்கு தகவல் வந்திருக்கிறது. என்ன காரணத்தால் இறந்திருந்தாலும், உடனடியாகத் தக்க நிவாரணப் பணம் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். இறந்தது லாப்ராஸ்கோப் பயன்படுத்தியதனால் அல்ல. லாப்ராஸ்கோப் என்ற முறை வெகு எளிதாக எந்தவிதமான பிரச்னையும் இல்லாமல், தழும்பு கூட காணப்படாத அளவுக்கு, வெகு சுலபமாக செய்யக்கூடிய அறுவை சிகிச்சையாகும். மற்ற மாநிலங்களிலே ரொம்பவும் முன்னேறி இருக்கிறார்கள். நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக அதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாப்ராஸ்கோப் முறை மற்ற முறைகளைக் காட்டிலும் எந்த அளவு மாறுபட்டது, எந்த அளவுக்குச் சிறப்புடையது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெகு சுலபமாக காலையிலே ஆபரேஷன் செய்து கொண்டு — வயிற்றுக்குள்ளே அப்டாமின் — காற்று அனுப்பி 'பிஷ்' செய்துவிட்டு, உடனடியாக, டியூப் ரப்பர் பேன்ட் மூலமாக, அதை 'அக்ரூஷன்' என்று சொல்வார்கள். அப்படிச் செய்யக்கூடிய ஆப்பரேஷனாக இருக்கிறது. — அப்படிச் சுலபமாக செய்து கொண்டு, அன்று மாலையிலே கூட அவர்கள் இல்லத்திற்குத் திரும்பி தன்னுடைய பணிகளிலே ஈடுபடலாம் என்ற அளவுக்குச் சுலபமாக செய்யக்கூடிய ஒரு அறுவை சிகிச்சை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நான் கேட்ட ஒரு கேள்விக்கு — நடைபாதையிலே உள்ளதுபற்றி கேட்டதற்கு, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடைபாதை முடிந்து ரெயில் பாதைக்கே வந்தாயிற்று. நடைபாதை முடிந்து ரொம்ப நேரமாயிற்று. இது லாப்ராஸ்கோப் என்ற ஒரு முறை பற்றிய கேள்வி. நல்வாழ்வுத்துறை அமைச்சர் சம்பந்தப்பட்டது.

1983 ஜனவரி 29]

திரு. பு. பொ. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லாப்ராஸ்கோப் மூலமாகச் செய்யப்படுகிற அறுவை சிகிச்சைகள் மிகப் பயனுள்ளதாக அமைந்து விட்ட காரணத்தினால், நல்ல விளம்பரம் அமைந்துவிட்ட காரணத்தினால், மருத்துவ மனைகளுக்கு ஏராளமான ஆண்களும் பெண்களும் அந்த அறுவை சிகிச்சைக்குச் செல்கிற காரணத்தால், அவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை செய்ய முடியாமல் பாதி பேர் திரும்ப வந்துவிடுகிறார்கள். ஆகவே, போதுமான அளவு எல்லா மருத்துவ மனைகளுக்கும் அந்த லாப்ராஸ்கோப் கருவிகளை வழங்கவும் அதற்காக நல்ல பயிற்சி தரவும் அரசு முன்வருமா என்பதையும், அதேபோல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அத்தனையிலும் இந்த அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய கேள்வி நல்ல கேள்வி. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. இப்பொழுது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி என்னவென்றால், 30 லாப்ராஸ்கோப் கருவிகளை, 4, 5 நாட்களுக்கு முன்புதான் இறக்குமதி செய்து அவைகளைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், அண்மையில் மத்திய அரசாங்க அடிஷனல் செக்கரட்டரி ஆப் ஹெல்த் திரு. பிஜ்ஜால் இங்கே வந்திருந்தார்கள். அவர்களோடு வாதாடி, அவரிடத்திலே 6 லாப்ராஸ்கோப் கருவிகளை வாங்கி இருக்கிறோம். ஆகவே, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலேகூட நிரந்தரமாக இரண்டு லாப்ராஸ்கோப் கருவிகள் வைத்து, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலேயே பயன்படுத்த நாம் தயாராக இருக்கிறோம்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் படிப்படியாகத்தான் நாம் செய்யவேண்டும். எச்சரிக்கையாக அங்கே பயன்படுத்த வேண்டும். இப்பொழுது பிரிட்டிஷ் எய்டட் தியேட்டர்கள் 30 இருக்கின்றன. முதலிலே நாம் அங்கே ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, இந்த லாப்ராஸ்கோப் மூலமாகச் சிகிச்சை பெறுகின்றவர்கள் மீண்டும் கருத்தரிக்க முடியும், அதாவது இரண்டு ரிங்ஸ் எடுத்துவிட்டால், மீண்டும் கருத்தரிக்க முடியும என்பது உண்மையா? அப்படியென்றால், மீண்டும் கருத்தரிக்க வாய்ப்பிருக்கும் என்ற வகையில் அந்த அறுவை சிகிச்சை செய்ய முடியும் என்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே ஏறத்தாழ 1½ ஆண்டுகளாக நாம் பயன்படுத்தி வருகிறோம். ஆகவே, இந்தப் பிரச்னை சில மாதங்களுக்குப் பிறகோ, சில ஆண்டுகளுக்குப் பிறகோ எழுந்தால், பரிசீலிக்கப்படும்.